www.Padasalai.Net www.TrbTnpsc.com

முயற்சி செய் முயன்று பார் வெற்றி நிச்சயம்

வானவில்

வேதியியல்

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

ஒரு மதிப்பெண் மற்றும்
மூன்று மதிப்பெண் வினா – விடை தொகுப்பு

வாழ்த்துச்செய்தி

வினா – விடை தொகுப்பு வெளியீட்டின் மூலம் பொதுத் தேர்வில் கேட்கப்பட்ட வினாக்களையும், முக்கியமான வினாக்களையும் ஒரே தொகுப்பாக மாணவர்கள் பெற முடிகிறது. இதனை மாணவர்கள் கூர்ந்து படித்து, பொதுத்தேர்வை நம்பிக்கையுடன் எதிர் கொள்ள முடியும் என நம்புகிறோம்.

இவ்வெளியீடு மாணவர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்குவதோடு அவர்தம் நல்வெற்றிக்கும் வழி வகுக்குமென உறுதியாக நம்புகிறோம். மாணவ – மாணவிகள் அதிக மதிப்பெண்கள் பெற்று, வெற்றி பெற எங்களின் மனமார்ந்த நல்வாழ்த்துகள்.

— *வானவில்*

தொகுப்பாளர்கள்:

பெ. சக்திவேல், M.Sc., B.Ed., M.Phil.,

பெ. வினாயகமூர்த்தி, D.TEd., M.Sc., B.Ed.,

பெ. சரஸ்வதி, D.TEd., B.Sc.,

வானவில்

டியூசன் சென்டர்.

அண்ணா தெரு, அவளூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

வானவில் டியூசன் சென்டர், அவளூர்.

12ம்– வகுப்பு வேதியியல்

மூன்று மதிப்பெண்கள் வினா – விடை தொகுப்பு

1. ஹெய்சன்பர்க்கின் நிலையில்லா கொள்கையைக் கூறுக.

ஒரே நேரத்தில் மிகவும் துல்லியமாக நுண்துகளின் நிலை மற்றும் திசைவேகம் ஆகியவற்றை அளவிட முடியாது.

$$\Delta x \cdot \Delta p \geq \frac{h}{4\pi}$$

2. He_2 மூலக்கூறு ஏன் உருவாகவில்லை? காரணம் கூறுக

ஹீலியத்தின் எலக்ட்ரான் அமைப்பு **(Z=2) $1s^2$** ஆகும். ஒவ்வொரு ஹீலியம் அணுவும் இரண்டு எலக்ட்ரான்களைப் பெற்றிருப்பதால் **He_2** மூலக்கூறில் நான்கு எலக்ட்ரான்கள் உள்ளன.

He_2 ன் எலக்ட்ரான் அமைப்பு **$(He_2) : (1s)^2 (*1s)^2$** **$N_b = 2$, $N_a = 2$**

பிணைப்புத்தரம் $= \dfrac{Nb - Na}{2} \quad \dfrac{2-2}{2} = 0$

பிணைப்புத் தரம் பூஜ்ஜியமாக இருப்பதால் ஹீலியம் மூலக்கூறு உருவாவதில்லை.

3. பிணைப்புத் தரம் என்றால் என்ன?

பிணைப்புத் தரம் என்பது பிணைப்பு மூலக்கூறு ஆர்பிட்டாலில் உள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கைக்கும், எதிர்பிணைப்பு மூலக்கூறு ஆர்பிட்டால்களில் உள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கைக்கும் உள்ள வேறுபாட்டில் பாதி அளவாகும்.

$$\text{பிணைப்புத்தரம்} = \frac{N_b - N_a}{2}$$

4. எலக்ட்ரான் ஆற்றலின் எதிர்க்குறியின் முக்கியத்துவம் யாது?

- முடிவிலாத் தொலைவிலுள்ள ஓர் எலக்ட்ரானின் ஆற்றல் தோராயமாக பூஜ்ஜியம் எனக் கருதலாம். இந்நிலையானது பூஜ்ஜிய ஆற்றல் நிலை எனப்படும்.
- எலக்ட்ரான் நகர்ந்து, அணுக்கருவின் கவர்ச்சிக்கு உட்படும்போது, அது குறிப்பிட்ட வேலையை செய்வதால் ஆற்றலை இழக்கிறது.
- எனவே, எலக்ட்ரானின் ஆற்றல் குறைந்து கொண்டே வந்து பூஜ்ஜியத்தை விட குறைவாகிறது. அதாவது எதிர்குறி மதிப்பை பெறுகிறது.

5. இனக்கலப்பு என்றால் என்ன?

ஏறக்குறைய சமமான ஆற்றல் கொண்ட அணு ஆர்பிட்டால்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து சமமான ஆற்றல், ஒத்த வடிவமுடைய ஆர்பிட்டால்களை உருவாக்குவதே ஆகும்.

6. பாலிங் அளவீடு, முலிக்கன் அளவீட்டின் குறைகளை எழுதுக.

பாலிங் அளவீட்டின் குறைகள்: பல திண்மங்களின் பிணைப்பு ஆற்றல்கள் துல்லியமாக தெரியாமல் இருப்பது.

முலிக்கன் அளவீட்டின் குறைகள்: சில தனிமங்களின் எலக்ட்ரான் நாட்ட மதிப்புகள் சரியாக இல்லாமல் இருப்பது இம்முறையின் குறையாகும்.

7. எலக்ட்ரான் நாட்டம் வரையறு?

வாயு நிலைமையிலுள்ள ஒரு நடுநிலை அணுவிற்கு ஓர் எலக்டரானை சேர்த்து எதிர் மின்சுமையுடைய அயனியை உருவாக்கும் போது வெளிவிடப்படும் ஆற்றலே எலக்ட்ரான் நாட்டம் எனப்படும்

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

8. ஃப்ளூரினின் எலக்ட்ரான் நாட்டம் குளோரினை விடக் குறைவு ஏன்?

- ஃப்ளூரினின் அணுவின் உருவளவு சிறியதாக இருப்பதால் 2p இணைக்கூடு நெருக்கமாக உள்ளது. எனவே இணைதிறன் எலக்ட்ரான்கள் விலக்கம் அடைகிறது. மேலும் சேர்க்கப்படும் எலக்ட்ரானை விலக்குகிறது. இந்த விலக்கு விசையே F- அணு எலக்ட்ரானை சேர்க்கும் சாத்தியம் குறைவதற்கு காரணம் ஆகும்.
- புளூரினின் அணு சிறிய உருவ அளவைப் பெற்றிருப்பதால் அணுக்கருவைச் சுற்றி அதிக எண்ணிக்கையில் எலக்ட்ரான்கள் உள்ளன. இந்த எலக்ட்ரான்கள் அணுக்கருவை மறைக்கின்றன. எனவே, நிகர அணுக்கரு மின்சுமை குறைகிறது. இதனால் சேர்க்கப்படும் எலக்ட்ரான் குறைந்த ஈர்ப்பு விசையைக் கொண்டுள்ளது. எனவே எலக்ட்ரான் நாட்டம் குறைகிறது.

9. B- ன் அயனியாக்கும் ஆற்றலை விட Be - ன் அயனியாக்கும் ஆற்றல் அதிகம் ஏன்?

போரான் அணு (Z=5) $1s^2\ 2s^2\ 2px^1$.

பெரிலியம் அணு (Z=4) $1s^2\ 2s^2$.

Be – அணுவில் 2s இணைக்கூடு முழுவதும் நிரம்பியுள்ளதால், Be - அணுவிலிருந்து எலக்ட்ரானை நீக்குவதற்கு அதிக ஆற்றல் தேவைப்படுகிறது. எனவே Be அதிக அயனியாக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது.

10. அயனியாக்கும் ஆற்றல் என்றால் என்ன?

வாயு நிலைமையிலுள்ள ஒரு தனித்த அணுவிலிருந்து ஓர் எலக்ட்ரானை நீக்குவதற்கு தேவைப்படும் ஆற்றல் அயனியாக்கும் ஆற்றல் எனப்படும்.

இதன் அலகு – KJ / mole.

11. Ne –ன் அயனியாக்கும் ஆற்றல் F –யை விட அதிகம் ஏன்?

Ne – ன் (அணு எண்– 10) $1s^2\ 2s^2\ 2p^6$

F – ன் (அணு எண்– 9) $1s^2\ 2s^2\ 2p^5$

Ne –ல் முழுமையாக நிரம்பிய ஆர்பிட்டால் காணப்படுவதால், அதிக நிலைப்புத் தன்மை வாய்ந்தது.

எனவே Ne –அணுவிலிருந்து எலக்ட்ரானை நீக்க அதிக ஆற்றல் தேவை.

12. Be மற்றும் N —ன் எலக்ட்ரான் நாட்ட மதிப்புகள் பூஜ்ஜியம் ஏன்?

Be — முழுவதும் நிரம்பிய ஆர்பிட்டாலும். $1s^2\ 2s^2$

N — சரிபாதி நிரம்பிய ஆர்பிட்டாலும் பெற்றுள்ளன. $1s^2\ 2s^2\ 2p^3$

- இதனால் Be மற்றும் N அதிக நிலைப்புத் தன்மையை பெற்றுள்ளன.
- நிலையான எலக்ட்ரான் அமைப்பை பெற்றிருப்பதனால் எலக்ட்ரான் நாட்ட மதிப்பு பூஜ்ஜியம் ஆகும்

13. பிளம்போ சால்வன்சி பற்றி குறிப்பு வரைக.

காற்றில்லா சூழ்நிலையில் லெட் தூய நீரினால் பாதிக்கப்படாது. ஆனால் நீரில் காற்று கரைந்து இருப்பின், கரையும் தன்மை பெற்ற நச்சுத்தன்மை கொண்ட லெட் ஹைட்ராக்சைடு தருகிறது. இதுவே 'பிளம்போ கரைப்பான்' என அழைக்கப்படுகிறது.

$$2\,Pb + O_2 + 2\,H_2O \longrightarrow 2\,Pb(OH)_2$$

14. P_2O_5 ஒரு மிகச்சிறந்த நீர் நீக்கும் கரணி என்பதை நிரூபி

சல்ஃபியூரிக் அமிலம், நைட்ரிக் அமிலம் உட்பட பல கனிமச் சேர்மங்களிலிருந்தும் கரிமச் சேர்மங்களில் இருந்தும் நீரை நீக்க பாஸ்பரஸ் பென்டாக்சைடு பயன்படுகிறது.

- இது ஒரு சிறந்த நீர் நீக்கும் காரணியாகப் பயன்படுகிறது.

$$H_2SO_4 \xrightarrow[-\,H_2O]{P_4O_{10}} SO_3 \qquad 2\,HNO_3 \xrightarrow[-\,H_2O]{P_4O_{10}} N_2O_5$$

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

15. பாஸ்பரஸ் அமிலம் சிறந்த ஒடுக்கும் கரணியாக செயல்படுகிறது என்பதை நிரூபி

பாஸ்பரஸ் அமிலத்தில் H- பிணைப்பு இருப்பதால். இது ஒரு சிறந்த ஒடுக்கும் கரணியாக செயல்படுகிறது.

$$2\,AgNO_3 + H_3PO_3 + H_2O \longrightarrow 2\,Ag + H_3PO_4 + 2\,HNO_3$$

பாஸ்பரஸ் அமிலம் சில்வர் நைட்ரேட்டை சில்வராக ஒடுக்குகிறது.

16. ஹீலியத்தின் பயன்கள் யாவை?

- ஆகாய விமான டயர்களில் நிரப்ப பயன்படுகிறது.
- He –ஆக்ஸிஜன் கலவை ஆழ்கடலில் நீந்துபவர்களுக்கு பயன்படுகிறது.
- He –ஆக்ஸிஜன் கலவை ஆஸ்துமா நோயை குணப்படுத்த பயன்படுகிறது.

17. ஆர்த்தோ பாஸ்பாரிக் அமிலம் எவ்வாறு ஆய்வகத்தில் தயாரிக்கப்படுகிறது?

குளிர்விப்பானுடன் கூடிய குடுவையில் சிவப்பு பாஸ்பரஸையும் 50% நைட்ரிக் அமிலத்தையும் எடுத்துக் கொண்டு நீர்த் தொட்டியில் வைத்து நைட்ரஜன் ஆக்சைடுகள் முழுவதும் வெளியேறும் வரை கொதிக்க வைக்கப்பட்டு பாஸ்பாரிக் அமிலம் தயாரிக்கப்படுகிறது. அயோடின் வினைவேக மாற்றியாக செயல்படுகிறது.

$$P + 5\,HNO_3 \xrightarrow{\Delta} H_3PO_4 + 5\,NO_2 + H_2O$$

18. a) PCl_5 b) H_3PO_3 ஆகியவற்றின் எலக்ட்ரான் அமைப்பை வரைக

19. H_3PO_3 இருகாரத்துவமுடையது ஏன்?

NaOH போன்ற காரங்களுடன் வினைபுரிந்து 2 வகையான உப்புகளைத் தருகிறது.

$$H_3PO_3 + NaOH \longrightarrow NaH_2PO_3 + H_2O$$

சோடியம் டை ஹைட்ரஜன் பாஸ்பைட்

$$H_3PO_3 + 2\,NaOH \longrightarrow Na_2HPO_3 + 2H_2O$$

டை சோடியம் ஹைட்ரஜன் பாஸ்பைட்

20. H_3PO_4 (ஆர்த்தோ பாஸ்பாரிக் அமிலம்) முக்காரத்துவமுடையது ஏன்?

NaOH போன்ற காரங்களுடன் வினைபுரிந்து 3 வகையான உப்புகளைத் தருகிறது.

$H_3PO_4 + NaOH \longrightarrow NaH_2PO_4 + H_2O$ (சோடியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட்)

$H_3PO_4 + 2NaOH \longrightarrow Na_2HPO_4 + 2H_2O$ (டை சோடியம் ஹைட்ரஜன் பாஸ்பேட்)

$H_3PO_4 + 3NaOH \longrightarrow Na_3PO_4 + 3H_2O$ (சோடியம் பாஸ்பேட்)

21. HF கண்ணாடி பாட்டில்களில் பாதுகாக்கப்படுவதில்லை ஏன்? (or) கண்ணாடியை அரித்தல் என்றால் என்ன?

HF மெழுகு தடவிய பாட்டில்களில் சேமிக்கப்படுகிறது. ஏனெனில் **HF** கண்ணாடியுடன் வினைபுரிந்து கண்ணாடியை அரித்துவிடுகிறது. எனவே, **HF** கண்ணாடி பாட்டில்களில் வைக்கப்படுவதில்லை.

$$Na_2SiO_3 + 6HF \longrightarrow Na_2SiF_6 + 3H_2O$$

$$SiO_2 + 4HF \longrightarrow SiF_4 + 2H_2O$$

22. தங்கம் எவ்வாறு இராஜதிராவகத்தில் கரைகிறது?

தங்கம் இராஜதிராவகத்தில் கரைந்து ஆரிக்குளோரைடை தருகிறது.

$$2\,Au + 9\,HCl + 3\,HNO_3 \longrightarrow 2\,AuCl_3 + 6\,H_2O + 3\,NOCl$$

23. ஃப்ளூரினின் ஆக்ஸிஜனேற்றும் திறன் பற்றி எழுதுக.

ஹேலஜன்கள் அனைத்தும் சிறந்த ஆக்ஸிஜனேற்றிகளாகும். அவற்றின் எலக்ட்ரான் நாட்டம் அதிகம். ஹேலஜன்களில் ஃப்ளூரின் மிகச்சிறந்த ஆக்ஸிஜனேற்றி ஆகும். எனவே ஃப்ளூரின் மற்ற ஹாலைடுகளை எளிதில் ஹேலஜன்களாக கரைசல் மற்றும் உலர்ந்த நிலையிலும்கூட ஆக்ஸிஜனேற்றம் செய்கிறது.

$$F_2 + 2X^- \longrightarrow 2F^- + X_2 \quad (X = Cl^-, Br^-, I^-)$$

24. ஹோல்ம்ஸ் முன்னறிவிப்பான் பற்றி சிறு குறிப்பு வரைக?

துளையிடப்பட்டுள்ள பெட்டியினுள் கால்சியம் பாஸ்பைடு மற்றும் கால்சியம் கார்பைடு நிரப்பி கடலில் எறியப்படுகிறது. துளை வழியாக பெட்டியினுள் நீர் நுழைந்து வினைபுரிந்து அசிட்டிலினையும் பாஸ்பீனையும் தருகிறது. பாஸ்பீன் காற்றுடன் உடனடியாக எரிந்து அசிட்டிலினையும் எரியச்செய்கிறது. சிவப்புநிறச் சுவாலையுடன் பாஸ்பீன் எரிவதால் உண்டாகும் பெரும்புகையும் சேர்ந்து கொள்கிறது. கடலில் உள்ள கப்பல்களுக்கு வழி காட்டுவதற்காக பயன்படுகிறது.

$$Ca_3P_2 + 6H_2O \longrightarrow 2PH_3\uparrow \text{ (பாஸ்பீன்) } + 3Ca(OH)_2$$

$$CaC_2 + 2H_2O \longrightarrow C_2H_2\uparrow \text{ (அசிட்டிலீன்) } + Ca(OH)_2$$

25. நியானின் பயன்கள் யாவை?

- விளம்பரங்களில் பயன்படும் ஒளிரும் குழல் விளக்குகளில் நியான் பயன்படுகிறது.
- அதிக மின்னழுத்தத்திலிருந்து மின்சாதனங்களை பாதுகாக்க ஹீலியத்துடன் சேர்த்து பயன்படுத்தப்படுகிறது.
- மூடுபனியினுள் ஊடுருவிச் செல்லும் பண்பை பெற்றிருப்பதால், ஆகாய விமானங்களில் பொருத்துகின்ற விளக்குகளில் இது பயன்படுகிறது.
- தாவரங்கள் வளர்வதை தூண்டுவதாலும், குளோரோபில் உருவாக பயன்படுவதாலும், தாவரத் தோட்டங்களில் இதன் விளக்குகள் பயன்படுகிறது.

26. ஹேலஜன் இடைச் சேர்மங்கள் எவ்வாறு உருவாகின்றன.

ஒரு ஹேலஜன் மற்றொரு ஹேலஜனுடன் சேர்ந்து உருவாகும் சேர்மங்களுக்கு ஹேலஜன் இடைச் சேர்மங்கள் என்று பெயர்.

எ.கா IF_5, IF_7

27. பொட்டாசஷ் படிகாரம் எவ்வாறு பெறப்படுகிறது?

பொட்டாகஷ் படிகாரம் படிகாரக் கல்லிலிருந்து பெருமளவில் தயாரிக்கப்படுகிறது

<u>அலுநைட்டிலிருந்து தயாரித்தல்</u> : அலுநைட் அல்லது படிகாரக்கல்லினை நன்கு தூளாக்கப்பட்டு நீர்த்த சல்ஃபியூரிக் அமிலத்துடன் சேர்த்து கொதிக்க வைக்கப்படுகிறது. அப்பொழுது அலுமினியம் ஹைட்ராக்சைடு பகுதி அலுமினியம் சல்பேட்டாக மாறுகிறது. இதனுடன் கணக்கிடப்பட்ட அளவு பொட்டாசியம் சல்பேட்டை சேர்த்து படிகாரம் படிகமாக்கப்படுகிறது.

28. குரோமைல் குளோரைடு சோதனை பற்றி எழுதுக?

ஏதாவது ஒரு குளோரைடு உப்பு மற்றும் அடர் கந்தக அமிலத்துடன் சூடுபடுத்தினால், ஆரஞ்சு சிவப்பு நிறமுடைய குரோமைல் குளோரைடு ஆவி வெளிவருகிறது.

$$K_2Cr_2O_7 + 4KCl + 6H_2SO_4 \longrightarrow 2CrO_2Cl_2 + 6KHSO_4 + 3H_2O$$

www.Padasalai.Net

29. எரிக்கப்பட்ட படிகாரம் என்றால் என்ன?

பொட்டாஷ் படிகாரத்தை 365K வெப்பநிலைக்கு சூடுபடுத்தும் போது உருகுகிறது. மேலும், வெப்பப்படுத்தினால் அனைத்து நீர் மூலக்கூறுகளையும் இழந்து உருவத்தில் பெரியதாகிறது. இதற்கு எரிக்கப்பட்ட படிகாரம் என்று பெயர்.

30. பிளாசபர் உல் என்றால் என்ன? வினையை எழுதுக.

ஜிங்க் காற்றின் முன்னிலையில் நன்கு எரிந்து வெண்மையான பஞ்சு போன்ற ஜிங்க் ஆக்சைடு உருவாகி பின்னர் இழை போன்று மாறுகிறது. இதற்கு பிளாசபர் உல் என்று பெயர்.

$$2Zn + O_2 \xrightarrow{\Delta} 2ZnO$$

31. இடைநிலைத் தனிமங்கள் அணைவுச் சேர்மங்களை உண்டாக்குவதேன்?

- d - தொகுதி தனிமங்களின் நேர்மின் அயனிகள், ஈனிகள் எனப்படும். இவை சில மூலக்கூறுகள் அல்லது அயனிகளுடன் அணைவுச் சேர்மங்களை உருவாக்கும் தன்மையை வலிமையாக பெற்றுள்ளன.

காரணம் :

- சிறிய உருவளவு மற்றும் அதிக நேர்மின் அடர்த்தி.
- வெற்றிடமான (n-1)d ஆர்பிட்டால்களைப் பெற்றுள்ளதால் அவை ஈனிகளில் உள்ள தனித்த மற்றும் பிணைப்பில் ஈடுபடாத எலக்ட்ரான்களைப் பெற்று பிணைப்பை தோற்றுவிக்கின்றன. (எ.கா) $[Cu(NH_3)_4]^{2+}$

32. சில்வர் உமிழ்தல் என்றால் என்ன? அதை எவ்வாறு தவிர்க்கலாம்?

உருகிய நிலையிலுள்ள சில்வரானது அதன் கன அளவைப் போல் 20 மடங்கு ஆக்ஸிஜனை உட்கொள்ளும் தன்மையுடையதாகும். இதனை குளிர்விக்கும் போது உறிஞ்சிய ஆக்ஸிஜன் வெளியேறுகிறது. இதற்கு சில்வர் உமிழ்தல் என்று பெயர்.

இச்செயலை உருகிய சில்வரின் மீது கரிபடலத்தை ஏற்படுத்துவதன் மூலம் தடுக்கலாம்.

33. காப்பர் சல்பேட் படிகங்களை வெப்பப்படுத்தும் போது நிகழ்வதென்ன?

$CuSO_4$ – ஐ வெப்பப்படுத்தும் போது, தனது படிக நீரை முற்றிலும் இழந்து, பின் 720°C வெப்பநிலையில், சிதைவடைந்து குப்ரிக் ஆக்சைடாகவும், SO_3 ஆகவும் மாறுகிறது.

$$CuSO_4\ 5H_2O \xrightarrow[-4H_2O]{100^oC} CuSO_4\ H_2O \xrightarrow[-H_2O]{230^oC} CuSO_4 \xrightarrow{720^oC} CuO + SO_3$$

34. ஜிங்க்-ஐ சூடான அடர் NaOH கரைசலுடன் சேர்க்கும் போது என்ன நிகழும்?

Zn உடன் NaOH சேர்த்து வினைப்படுத்தினால் சோடியம் ஜிங்கேட் சேர்மம் கிடைக்கிறது.

$$\underset{\text{ஜிங்க்}}{Zn} + 2NaOH \longrightarrow \underset{\text{சோடியம் ஜிங்கேட்}}{Na_2ZnO_2} + H_2$$

35. Mn^{3+} அயனிகளை விட Mn^{2+} அயனிகள் அதிக நிலைப்புத் தன்மையை கொண்டுள்ளன. ஏன்? விளக்குக

- Mn^{2+} அயனியின் வெளிக்கூட்டு எலக்ட்ரான் அமைப்பு $3d^5$ ஆகும். ஆனால் Mn^{3+} அயனியின் வெளிக்கூட்டு எலக்ட்ரான் அமைப்பு $3d^4$.
- சரிபாதி நிரம்பிய ஆர்பிட்டால்கள் (அல்லது) முழுமையாக நிரம்பிய ஆர்பிட்டால்கள் அதிக நிலைப்புத் தன்மையைப் பெற்றுள்ளன
- எனவே, d- ஆர்பிட்டாலில் சரிபாதி நிரம்பியுள்ள எலக்ட்ரான் அமைப்பைப் பெற்ற Mn^{2+} அதிக நிலைப்புத் தன்மையை கொண்டுள்ளது.

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

36. d- தொகுதி தனிமங்கள் மாறுபடும் ஆக்ஸிஜனேற்ற நிலையை பெற்றிருப்பதேன்?

அனைத்து d-தொகுதி தனிமங்களும் மாறுபடும் ஆக்ஸிஜனேற்ற நிலையை பெற்றுள்ளன.

- இந்த தனிமங்களில் பல (n-1)d மற்றும் ns எலக்ட்ரான்களைக் கொண்டுள்ளன
- (n-1)d மற்றும் ns ஆர்பிட்டாலுக்கும் உள்ள ஆற்றல் வேறுபாடு மிகக் குறைவாகும்.

37. Ni^{2+} அயனிகள் நிறமுள்ளவையாக உள்ளன. ஆனால் Zn^{2+} உப்புகள் மட்டும் வெண்மையாக உள்ளன. ஏன்?

- Ni^{2+} — அயனியின் வெளிக்கூட்டு எலக்ட்ரான் அமைப்பு $3d^8$
- Ni^{2+} அயனியில் குறைந்த ஆற்றல் மட்டத்திலிருந்து உயர் ஆற்றல் மட்டத்திற்கு d - எலக்ட்ரான்கள் உயர்த்தப்படுவதால் கட்புலனாகும் ஒளியை உறிஞ்சுகிறது. எனவே, நிறமுடைய உப்புக்களை தருகின்றன.
- Zn^{2+} — அயனியின் வெளிக்கூடு எலக்ட்ரான் அமைப்பு $3d^{10}$
- ஆனால் Zn^{2+} அயனியின் d - ஆர்பிட்டால் முழுமையாக நிரம்பி இருப்பதால் எலக்ட்ரான்கள் உயர்த்தப்படுவதில்லை. இதனால் நிறமுடைய ஒளியை உறிஞ்சுவதில்லை.
- எனவே Zn^{2+} உப்புகள் வெண்மையாக உள்ளன.

38. குரோம் முலாம் பூசுதல் எவ்வாறு நிகழ்த்தப்படுகிறது?

குரோமிய முலாம் பூச வேண்டிய பொருளை எதிர்மின் வாயாகவும், லெட் தகட்டை நேர்மின் வாயாகவும் கொண்டு குரோமிக் அமிலம், சல்பியூரிக் அமிலம் கலந்த கரைசலை மின்பகுளியாகக் கொள்ளப்படுகிறது. மின்னாற்பகுக்கும் போது குரோமியம் பொருளின் (எதிர்மின்வாய்) மீது சீராக படிகிறது.

பொதுவாக குரோமிய முலாம் பூசுவதற்கு முன்னர் நிக்கல் முலாம் பூசப்படுகிறது.

www.Padasalai.Net

39. இடைநிலைத் தனிமங்கள் எளிதில் நிறமுடைய சேர்மங்களைத் தருகின்றன ?

பெரும்பான்மையான இடைநிலை உலோகச் சேர்மங்கள் திட அல்லது கரைசல் நிலையில் நிறமுள்ளவையாக உள்ளன. உலோக அயனிகளின் நிறத்திற்கு காரணம். தனித்த எலக்ட்ரான் அமைப்பு மற்றும் ஒரே இணைக் கூட்டில் உள்ள அடுத்தடுத்த ஆற்றல் மட்டங்களுக்கு இடையேயான சிறிய ஆற்றல் வேறுபாடு ஆகும். இந்த குறைந்த ஆற்றலை எளிதாக கட்புலனாகும் ஒளியினால் கூட தர இயலும். எனவே உறிஞ்சப்பட்ட ஒளிக்கு ஈடான மற்றொரு நிறத்தைக் கொடுக்கிறது.

40. லூனார் காஸ்டிக் என்றால் என்ன? வினையை எழுதுக.

வெள்ளியை நீர்த்த நைட்ரிக் அமிலத்தில் கரைத்தால் வெள்ளி நைட்ரேட் கிடைக்கிறது. இது லூனார் காஸ்டிக் என அழைக்கப்படுகிறது.

$$3Ag + 4\,HNO_3 \longrightarrow \underset{\text{வெள்ளி நைட்ரேட்}}{3AgNO_3} + 2H_2O + NO\uparrow$$

41. ஹைட்ரஜன் குண்டு செய்வதிலுள்ள அறிவியல் கருத்து யாது?

ஹைட்ரஜன் உட்கருக்கள் இணைந்து ஹீலியம் உட்கரு உருவாகும் போது மிகுந்த ஆற்றல் வெளிவருகிறது. மேற்காணும் வினையில் பங்கு பெறும் $_1H^2$ மற்றும் $_3Li^6$ உட்கரு பிளப்பு வினை நிகழ்ந்து, உட்கரு பிணைப்பு வினைக்குத் தேவையான வெப்பநிலையை உருவாக்குகிறது.

42. உட்கரு வினைகளில் Q மதிப்பு என்றால் என்ன?

உட்கரு வினை நிகழும் போது உறிஞ்சப்படும் அல்லது வெளியிடப்படும் ஆற்றலே உட்கரு வினையின் **Q** மதிப்பு எனப்படும்.

$$Q = (m_p - m_r)\ 931\ MeV$$

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

43. அதிமின் கடத்திகள் என்றால் என்ன? ஏதேனும் ஒரு பயனை கூறுக.

அதிக குளிரவைக்கப்பட்ட சில சேர்மங்கள் எத்தகைய மின்தடையுமின்றி மின்சாரத்தைக் கடத்தும் செயல்முறை அதிமின்கடத்து திறன் எனப்படும். அதிமின்கடத்துதிறன் நிலையிலுள்ள பொருளானது பூஜ்ஜிய மின்தடையைப் பெற்றுள்ளது. இப்பண்பைப் பெற்றுள்ள சேர்மங்கள் அதிமின்கடத்திகள் எனப்படுகின்றன.

- இவை புதிய தலைமுறை ஆற்றல் சேமிப்பு திறன் அமைப்புகளின் அடிப்படை ஆகும். சாதாரண ஜெனரேட்டர்களை விட குறைந்த எடையும், சிறிய உருவளவும் பெற்றுள்ளதால் இதில் அதிக ஆற்றலை சேமிக்கலாம்.

44. விட்ரியஸ் நிலைமை என்றால் என்ன?

- படிக வடிவமற்ற திடப்பொருளான கண்ணாடி விட்ரியஸ் நிலைமையில் காணப்படும்.
- கண்ணாடி அல்லது விட்ரியஸ் நிலைமை என்பது திட மற்றும் நீர்ம நிலைகளுக்கு இடையில் உள்ள நிலைமை எனப்படுகிறது.

45. ஓர் அலகுக் கூட்டிலுள்ள CsCl அலகுகளின் எண்ணிக்கையை கணக்கிடுக.

CsCl பொருள்மைய கனசதுர வகையைச் சார்ந்ததாகும்

ஓர் அலகுக் கூட்டிலுள்ள அலகுகளின் எண்ணிக்கை $= \frac{N_c}{8} + \frac{N_b}{1} = \frac{8}{8} + \frac{1}{1} = 2$

ஓர் அலகுக் கூட்டிலுள்ள அலகுகளின் எண்ணிக்கை = 2

46. பிராக் விதியை கூறுக.

X – கதிர்களின் அலைநீளம், படிகத்தில் உள்ள தளங்களுக்கு இடையேயான தொலைவு மற்றும் எதிரொளிப்புக் கோணம் ஆகியவைகளுக்கு இடையேயான தொடர்பை விளக்கும் எளிய சமன்பாடு பிராக் சமன்பாடு ஆகும்

$$n\lambda = 2d \sin\theta$$

47. அதிமின்கடத்து நிலைமாறு வெப்பநிலை என்றால் என்ன?

- ஒரு பொருளின் அதிமின்கடத்து நிலைமாறு வெப்பநிலை Tc என்பது ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் ஒரு பொருளின் மின்தடையானது திடீரென பூஜ்ஜியத்தை அடைவதாகும்.
- அந்த வெப்பநிலையில் பொருளானது சாதாரண நிலையில் இருந்து அதிமின் கடத்தியாக மாறிவிடுகிறது.

48. மூலக்கூறு படிகங்கள் பற்றிக் குறிப்பு வரைக.

மூலக்கூறு படிகங்களில் உள்ள அணிக்கோவை புள்ளிகளில் மின்சுமையற்ற மூலக்கூறுகள் அமைந்துள்ளன. மூலக்கூறுகள் பிணைந்துள்ள விசைகள் இருவகைப்படும்.

அ) இருமுனை—இருமுனை கவர்ச்சி விசை
ஆ) வாண்டர்வால்ஸ் கவர்ச்சி விசைகள் ஆகும்.

49. டிரவுட்டன் விதியைக் கூறுக.

ஒரு நீர்மத்தின் ஆவியாதல் வெப்பத்தை அதன் கொதிநிலையால் வகுக்கும் போது கிடைக்கும் மதிப்பு மாறிலி ஆகும்

$$\Delta S_{vap} = \frac{\Delta H_{vap}}{T_b} = 21 \text{ கலோரி டிகிரி}^{-1} \text{ மோல்}^{-1}.$$

50. டிரவுட்டன் விதியிலிருந்து விலகல் அடைந்துள்ள சேர்மங்கள் யாவை?

H_2, He, H_2O, ஆல்கஹால் மற்றும் CH_3COOH

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

51. என்ட்ரோபி என்றால் என்ன? அதன் அலகுகளைக் கூறுக.

என்ட்ரோபி என்பது ஒழுங்கற்ற தன்மையை அளவிடும் ஓர் பண்பாகும்.

என்ட்ரோபி சார்பு 'S' என்பது உமிழப்படும் வெப்பத்திற்கும் 'q' செயல்முறையின் வெப்பத்திற்கும் 'T' இடையேயுள்ள விகிதமாகும்.

$$S = \frac{q}{T}$$

SI அலகு — ***JK***$^{-1}$ *(OR)* ***Eu***

52. வெப்ப இயக்கவியலின் கெல்வின் – பிளாங் கூற்றை எழுதுக.

ஒரு முழுமையான சுற்றில் ஒரு பொருளிலிருந்து வெப்பத்தை உறிஞ்சி, அமைப்பில் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் முழுவதுமாக வேலையாக மாற்றக்கூடிய ஓர் இயந்திரத்தை வடிவமைக்க இயலாது.

53. வெப்ப இயக்கவியலின் கிளாசியஸ் கூற்றை எழுதுக.

எத்தகைய வேலையும் செய்யாமல் வெப்பத்தை குளிர்ந்த பொருளிலிருந்து மற்றொரு சூடான பொருளுக்கு மாற்றுவது இயலாது.

54. லீ சாட்லியர் கொள்கையைக் கூறுக.

சமநிலையில் உள்ள ஓர் அமைப்பின் மீது பாதிப்பை ஏற்படுத்தினால் சமநிலையானது அந்த பாதிப்பினால் உண்டாகும் விளைவை சமன் செய்யும் திசையை நோக்கி நகரும்.

55. சமநிலை மாறிலி என்றால் என்ன?

மாறாத வெப்பநிலையில் வினைவிளை பொருள்களின் செயல்படு பொருண்மைகளின் பெருக்குத் தொகைக்கும், வினைபடு பொருள்களின் செயற்படு பொருண்மைகளின் பெருக்குத் தொகைக்கும் உள்ள விகித மாறிலி ஆகும்

$$\text{அதாவது சமநிலை மாறிலி } (K_c) = \frac{K_f}{K_r} = \frac{[C]^c\,[D]^d}{[A]^a\,[B]^b}$$

56. வினை குணகம் – வரையறு. சமநிலை மாறிலியுடன் அதன் தொடர்பு என்ன?

சமநிலையற்ற நிலையில் வினைபடு பொருள்களின் செறிவிற்கும் வினைவிளை பொருள்களின் செறிவிற்கும் இடையேயான விகிதம் ஆகும்.

$$Q = \frac{[L]^l\,[M]^m}{[A]^a\,[B]^b}$$

57. $\triangle n_g = 0$, $\triangle n_g = -Ve$, $\triangle n_g = +Ve$ ***ஆக இருக்கும்போது ஒரு வாயு வினையில் என்ன நிகழும்?***

- $\triangle n_g = 0$ என்றால் வினைபடு பொருள்களின் மொத்த மோல்களின் எண்ணிக்கையும், வினைவிளை பொருள்களின் மொத்த மோல்களின் எண்ணிக்கையும் சமம்.
- $\triangle n_g = +Ve$ என்றால் வாயு நிலையில் உள்ள மொத்த வினைவிளை பொருள்களின் எண்ணிக்கையானது, மொத்த வினைபடு பொருள்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கும்.
- $\triangle n_g = -Ve$ என்றால் வாயு நிலையில் உள்ள மொத்த வினைவிளை பொருள்களின் எண்ணிக்கையானது, மொத்த வினைபடு பொருள்களின் எண்ணிக்கையை விடக் குறைவாக இருக்கும்.

58. கிளர்வு கொள் ஆற்றல் – வரையறு.

வினைபடு மூலக்கூறுகள் மோதலின் காரணமாக நெருங்கி வந்து வினைவிளை மூலக்கூறுகளாக மாறுகின்றன. மோதலில் ஈடுபடும் அனைத்து மூலக்கூறுகளும் பெற்றிருக்கும் குறிப்பிட்ட அளவு குறைந்த ஆற்றலானது குறைந்த பட்ச ஆற்றல் எனப்படும்.

இத்தகைய குறைந்தபட்ச ஆற்றலை அடைவதற்குச் சேர்க்கப்படும் ஆற்றலானது கிளர்வுறு ஆற்றல் எனப்படும்

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

59. வினைவகை வரையறு.

ஒரு வேதிவினையின் சோதனை மூலம் நிர்ணயிக்கப்பட்ட வினைவேக விதியில் உள்ள செறிவுகளின் படிகளின் கூடுதலே வினைவகை எனப்படும்.

வினைவேகம் = $k\,[A]^p\,[B]^q$

60. அரை வாழ்வு காலம் – வரையறு?

வினைபடு பொருளின் தொடக்கச் செறிவின் மதிப்பானது பாதியாக குறைவதற்குத் தேவைப்படும் நேரம் ஆகும்

$$t_{1/2} = \frac{0.693}{k}$$ வினாடிகள்

61. அர்ஹீனியஸ் சமன்பாட்டை எழுதி விளக்குக?

$$K = Ae^{-Ea/RT}$$

K = வினைவேக மாறிலி A = அதிர்வு காரணி E_a = கிளர்வுறு ஆற்றல்

R = வாயுமாறிலி T = வெப்பநிலை

62. அடுத்தடுத்து நிகழும் வினைகள் என்றால் என்ன என்பதை விளக்குக?

வினைகளில் வினைபடு பொருள் முதலில் இடைநிலைப் பொருளையும், பிறகு இடைநிலைப் பொருளானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொடர் வினைகளில் விளைபொருளை உருவாக்கினால் அவ்வகை வினைகள் அடுத்தடுத்து நிகழும் வினைகள் அல்லது தொடர் வினைகள் என அழைக்கப்படுகின்றன.

$$A \xrightarrow{k_1} B \xrightarrow{k_2} C$$

A = வினைபடு பொருள் B = இடைநிலைப் பொருள் C = விளைபொருள்

63. இணை வினைகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக?

வினைபடு பொருள்கள் ஒரே நேரத்தில் பல வழிகளில் வினைபட்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வினைவிளை பொருள்களைத் தருகின்றன. எனவே இவ்வகை வினைகள் **இணை வினைகள்** அல்லது **பக்க வினைகள்** என்றும் அழைக்கப்படுகின்றன.



(விளைபொருள்கள்)

வினைபடு பொருள்

64. போலி முதல் வகை வினை என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக?

ஓர் இரண்டாம் வகை வினையில் ஏதாவதொரு வினைபடு பொருளின் செறிவை அதிகமாக (10 முதல் 100 மடங்கு) மற்றொன்றை விட எடுத்துக் கொள்ளும் போது, அவ்வினை முதல் வகை வினை எனப்படும்.

$$CH_3COOCH_3 + H_2O \xrightarrow{H^+} CH_3COOH + CH_3OH$$

65. எளிய மற்றும் சிக்கலான வினைகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக?

<u>எளிய வினைகள்:</u> ஒரே படியில் மட்டும் நடைபெறக் கூடிய வினைகள் எளிய வினைகள் எனப்படும்

$$NaOH + HCl \longrightarrow NaCl + H_2O$$

<u>சிக்கலான வினைகள்:</u> ஒரு படியில் நிகழாமல் வரிசையான பல படிகளில் நிகழும் வினைகள் சிக்கலான வினைகள் எனப்படும்.

$$R'OOC-(CH_2)_n-COOR \longrightarrow R'OOC-(CH_2)_n-COOH \longrightarrow HOOC-(CH_2)_n-COOH$$

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

66. எதிரெதிர் வினைகளுக்கான சான்றுகள் தருக.

- $CO_{(g)} + NO_{2\,(g)} \underset{k_r}{\overset{k_f}{\rightleftharpoons}} CO_{2\,(g)} + NO_{(g)}$

  கார்பன் டை ஆக்ஸைடு

  <u>HI சிதைவடையும் வினை</u>

- $2HI_{(g)} \rightleftharpoons H_{2\,(g)} + I_{2\,(g)}$

67. தன் வினைவேக மாற்றி பற்றி எழுதுக.

சில வினைகளில் உருவாகும் விளை பொருள்களில் ஒன்று வினைவேக மாற்றியாகச் செயல்படுகிறது. அத்தகைய வினைவேக மாற்றி தன்வினை வேக மாற்றி என்றும், இந்த செயல்முறைக்கு தன்வினைவேக மாற்றம் என்றும் அழைக்கப்படுகிறது.

(எ.கா) : ஆக்ஸாலிக் அமிலத்தைப் பொட்டாசியம் பெர்மாங்கனேட் மூலம் ஆக்சிஜனேற்றம் செய்யும் போது, விளை பொருள்களில் ஒன்றான $MnSO_4$ தன் வினைவேக மாற்றியாகச் செயல்படுகிறது

68. வினைவேக மாற்றி நச்சு என்றால் என்ன?

வினை நிகந்து கொண்டிருக்கும் போது, வினைவேக மாற்றியின் செயல்திறனை இழக்கச் செய்யும் சேர்மத்திற்கு வினைவேக மாற்றி நச்சு என்று பெயர்.

$$N_2 + 3H_2 \underset{H_2S}{\overset{Fe}{\rightleftharpoons}} 2NH_3$$

Fe – வினைவேக மாற்றி H_2S – வினைவேக மாற்றி நச்சு ஆக செயல்படுகிறது.

69. உயர்த்திகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக?

ஒரு சேர்மம் வினைவேக மாற்றியாகச் செயல்படாமல், வினைவேக மாற்றியின் செயல்திறனை அதிகரித்தால் அதற்கு உயர்த்திகள் என்று பெயர்.

ஹேபர் முறையில் Fe- வினைவேக மாற்றியாகவும், Mo - உயர்த்தியாகவும் செயல்படுகிறது.

$$N_2 + 3H_2 \underset{Mo}{\overset{Fe}{\rightleftharpoons}} 2NH_3$$

70. வினைவேக மாற்றியின் சிறப்பம்சங்கள் யாவை?

- வினை முற்றுபெற்ற பிறகு நிறை (ம) வேதி இயைபில் மாற்றம் ஏற்படுவதில்லை
- குறைந்த அளவே தேவைப்படுகிறது.
- வினையின் வேகத்தை மட்டும் மாற்றும்.

71. கூழ்மமாக்கல் என்றால் என்ன? எ.கா. தருக.

வீழ்படிவான பொருள் கூழ்மக் கரைசலாக கரைசலில் உள்ள மின்பகுளியின் காரணமாக விரவுதல் கூழ்மமாக்கல் எனப்படும்.

(எ.கா) வெள்ளி குளோரைடு உடன் HCl சேர்த்து கூழ்மம் தயாரித்தல்

72. கரைப்பான் எதிர் (ம) கரைப்பான் கவர் கூழ்மங்கள் என்றால் என்ன?

பிரிகை நிலைமை பிரிகை ஊடகத்துடன் மிகக் குறைந்த கவர்ச்சி விசையை பெற்றிருந்தால் அந்த கூழ்ம கரைசல் கரைப்பான் எதிர் கூழ்மம் எனப்படும். (எ.கா) நீரில் உள்ள சல்பர்	பிரிகை நிலைமை பிரிகை ஊடகத்துடன் அதிக கவர்ச்சி விசையை பெற்றிருந்தால் அந்த கூழ்ம கரைசல் கரைப்பான் கவர் கூழ்மம் எனப்படும். (எ.கா) நீரில் உள்ள ஸ்டார்ச்

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

73. பால்மங்கள் என்றால் என்ன? அவற்றின் பயன்கள்.

இரண்டு நீர்மங்களை குலுக்கும்போது ஒரு நீர்மம் மற்றொரு நீர்மத்தில் பிரிகை அடைந்துள்ளதாக கிடைக்கும் கூழ்மத்திற்கு பால்மங்கள் என்று பெயர்.

இரண்டு வகைப்படும்.

எண்ணெய் பிரிகையடைந்துள்ள நீர் (O/W வகை)

நீர் பிரிகையடைந்துள்ள எண்ணெய் (W/O வகை)

74. வாயு – வாயு கூழ்ம அமைப்பு ஏன் உருவாவதில்லை?

- வாயு – வாயு கூழ்மம் தோன்றுவதில்லை

காரணம் : வாயுக்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து உண்மைக் கரைசலை தருகின்றன.

75. டின்டால் விளைவு & பிரௌனியன் இயக்கம் என்றால் என்ன?

- கூழ்மத்தின் வழியே ஒளியை செலுத்தும் போது ஒளியினை சிதறடிக்கும் பண்பு டின்டால் விளைவு
- பிரிகை ஊடகத்தில் கூழ்மத்துகள்கள் அங்கும் இங்கும் ஒழுங்கின்றி திரியும் செயல் பிரௌனியன் இயக்கம் ஆகும்.

காரணம் : கூழ்மத் துகளை தொடர்ச்சியாக பிரிகை ஊடக மூலக்கூறுகள் ஒழுங்கின்றி மோதுவது ஆகும்.

76. இயற்பியல் மற்றும் வேதியியல் பரப்பு கவர்ச்சிகளுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?

இயற்பியல் பரப்பு கவர்ச்சி	*வேதியியல் பரப்பு கவர்ச்சி*
பரப்புக் கவர்தலின் வெப்பம் குறைவு	பரப்புக் கவர்தலின் வெப்பம் அதிகம்
மீள் தன்மையுடையது	மீளா தன்மையுடையது
பரப்புக் கவரும் பொருளின் பரப்பின் மீது பல மூலக்கூறு அடுக்கினைத் தோற்றுவிக்கிறது.	ஒற்றை மூலக்கூறு அடுக்கு மட்டும் உருவாகிறது

77. மின் முனைக் கவர்ச்சி (அ) காட்டேபோரசிஸ் என்றால் என்ன?

கூழ்மத் துகள்களின் வழியே மின்னோட்டத்தை செலுத்தும் போது மின்முனையை நோக்கி நகரும் செயல் மின்முனைக் கவர்ச்சி ஆகும்.

78. பொது அயனி விளைவு என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.

- ஓர் உப்பின் பிரிகை வீதம் பொது அயனியைச் சேர்ப்பதால் குறைவது பொது அயனி விளைவு எனப்படும்

NaCl ஐ சேர்க்கும் போது பொது அயனி (Cl^-) விளைவு காரணமாக *AgCl*- ன் கரைதிறன் குறைகிறது.

79. கோல்ராஷ் விதியை கூறுக.

அளவில்லா நீர்த்த நிலையில் மின்பகுளியின் அயனியாக்கம் நிறைவு பெறுகிறது. ஒவ்வொரு அயனியும் தன்னிச்சையாக நகருகிறது. ஒவ்வொரு அயனியும் மொத்த கடத்து திறனுக்கு குறிப்பிட்ட மதிப்பினை கொடுக்கின்றது.

$$\lambda_{\alpha}, NaCl = \lambda_{\alpha} Na^{+} + \lambda_{\alpha} \mathbf{Cl}^{-}$$

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

80. மின்னாற்பகுத்தல் பற்றி ஃபாரடேயின் விதிகளைக் கூறுக.

ஃபாரடேயின் முதல் விதி : மின்னாற் பகுத்தலின் போது மின்வாயில் வெளிப்படும் பொருளின் நிறையானது (m) மின்பகுளியின் வழியே செலுத்தப்படும் மின்னோட்டத்தின் அளவிற்கு (Q) நேர்விகிதத்திலிருக்கும்.

ஃபாரடேயின் இரண்டாம் விதி : வெவ்வேறு மின்பகுளிகளின் வழியே ஒரே அளவு மின்னோட்டத்தை செலுத்தும் போது, மின்வாய்களில் வெளிப்படும் பொருள்களின் அளவுகள் அவற்றின் வேதிச் சமானங்களுக்கு நேர்விகிதத்திலிருக்கும்.

81. மின்வேதிச் சமானநிறை வரையறு? அதன் அலகு யாது?

ஓர் ஆம்பியர் மின்னோட்டத்தை மின்பகுளியின் வழியே ஒரு விநாடி, செலுத்தும்போது படியும் சேர்மத்தின் அளவு மின்வேதிச் சமான நிறை எனப்படும்.

அலகு: $Kg.C^{-1}$

82. ஆஸ்வால்டின் நீர்த்தல் விதியை கூறுக.

வலிமை குறைந்த மின்பகுளியின் பிரிகை மாறிலி, பிரிகை வீதம், மற்றும் செறிவுடன் தொடர்புபடுத்தும் சமன்பாட்டிற்கு ஆஸ்வால்டின் நீர்த்தல் விதி என்று பெயர்.

$$k_a = \frac{C\alpha^2}{1-\alpha}$$

83. தாங்கல் கரைசல் என்றால் என்ன?

சிறிதளவு அமிலம் அல்லது காரம் சேர்க்கும் போது கரைசலின் P^H மதிப்பு மாறாமல் இருப்பது தாங்கல் கரைசல் ஆகும். (எ.கா) அமில தாங்கல் கரைசல் ($CH_3COOH + CH_3COONa$)

84. சுழிமாய் கலவை என்றால் என்ன?

d மற்றும் *l* மாற்றியங்களை சமஅளவில் கலந்தால் கிடைப்பது சுழிமாய் கலவை எனப்படும்.

(உதாரணம்) லாக்டிக் அமிலம் , டார்டாரிக் அமிலம்

85. மீசோ அமைப்பை சுழிமாய்க் கலவையிலிருந்து வேறுபடுத்துக.

சுழிமாய்க் கலவை	மீசோ அமைப்பு
இது ஒரு கலவை. இதிலுள்ள மாற்றியங்களை பிரித்தல் இயலும்	இது ஒரு சேர்மம். இதிலுள்ள மாற்றியங்களை பிரித்தல் இயலாது
புறமார்ந்த ஈடு செய்தலால் இது ஒளி சுழற்றும் தன்மை இழக்கிறது.	இது உள்ளார்ந்த ஈடு செய்தலால் ஒளி சுழற்றும் தன்மை அற்றதாகிறது.
கைரல் தன்மை உள்ளவை	கைரல் தன்மையற்றவை

86. மீசோடார்ட்டாரிக் அமிலம் ஒளிசுழற்றும் தன்மை இல்லாத சேர்மம். உன்பதிலை கூறுக

மீசோ மாற்றியத்தில் இரண்டு சீர்மைத்தன்மையற்ற கார்பன் அணுக்கள் இருப்பினும், ஒன்று மற்றொன்றின் ஆடி பிம்பமாக இருக்கிறது. விளைவு, இம்மூலக்கூறை முழுமையாக நோக்கும்போது சீர்மைத் தன்மையுள்ளதாக இருக்கிறது. சீர்மைத்தளம் இம்மூலக்கூறை இரு சம பாதியாக பிரிக்கிறது. அதனால் இம்மூலக்கூறில் புறவெளி அமைப்பு, ஆடி பிம்பத்தின் மேற்பொருந்துவதாக உள்ளது. மீசோடார்டாரிக் அமிலத்தின் ஒளி சுழற்றாத் தன்மை மூலக்கூறின் உள்ளார்ந்த பண்பாகிறது



மீசோடார்டாரிக் அமிலம்

www.Padasalai.Net

87. கீழ்க்கண்ட மூலக்கூறு அமைப்பிற்கான E , Z குறியீட்டை எழுதுக.





தீர்வு: E — அமைப்பு Z — அமைப்பு

88. டிரான்ஸ் அமைப்பின் நிலைப்புத் தன்மை சிஸ் அமைப்பின் நிலைப்புத் தன்மையை விட அதிகம் ஏன்?

சிஸ் அமைப்பில் ஒத்த தொகுதிகள் ஒரே திசையில் இருப்பதால் கொள்ளிட தடை மற்றும் விலக்கு விசை ஏற்படுவதால் நிலைப்புத் தன்மை குறைவாக உள்ளது.

டிரான்ஸ் அமைப்பில் ஒத்த தொகுதிகள் எதிரெதிர் திசையில் இருப்பதால் கொள்ளிட தடை மற்றும் விலக்கு விசை இல்லை என்பதால் நிலைப்புத் தன்மை அதிகமாக உள்ளது.

89. பிக்ரிக் அமிலம் தயாரித்தல் வினையை எழுதுக?

பீனால் நைட்ரோ ஏற்றக் கலவையுடன் வினைபுரிந்து பிக்ரிக் அமிலத்தை கொடுக்கிறது.



90. ஒளிச்சுழற்சி மாற்றியத்திற்கான நிபந்தனைகள் யாவை?

- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீர்மையற்ற கார்பன் இருத்தல் வேண்டும்.
- ஒளிச்சுழற்சி மாற்றியங்களின் வடிவங்கள் ஒன்றின் மீது ஒன்று மேற்பொருந்தாத் தன்மையை பெற்றிருத்தல் வேண்டும்

91. பீனால்ஃப்தலீன் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

பீனாலுடன் தாலிக் அமில நீரிலியை சேர்த்து அடர் H_2SO_4 முன்னிலையில் வினைப்படுத்தினால், *பினால்ஃப்தலீன்* உண்டாகிறது.



92. ஆல்கஹால் உட்கொண்ட மனிதனை எவ்வாறு கண்டறியலாம்?

(அல்லது)

சுவாச பகுப்பாய்வு சோதனையை எழுதுக.

ஒருவன் ஆல்கஹால் உட்கொண்டிருப்பதைக் கண்டுபிடிக்க சுவாசப் பகுப்பாய்வு நடத்தப்படுகிறது. எத்தனாலை அமிலங்கலந்த பொட்டாசியம் டைகுரோமேட்டினால் ஆக்ஸிஜனேற்றம் செய்து கவனித்தறியப்படுகிறது. மஞ்சள் நிற குரோமியம் அயனி (Cr^{VI}), (Cr^{III}) எனும் பச்சை நிற அயனிகளாக மாறினால் ஆல்கஹால் உட்கொண்டது உறுதி செய்யப்படுகிறது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

93. டை ஆக்சேன் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

எத்திலீன் கிளைக்காலுடன் அடர் கந்தக அமிலத்தை வினைபுரியச் செய்தால், இரு நீர் மூலக்கூறுகள் இழந்து டை ஆக்சேன் கிடைக்கிறது.



கிளைக்கால் 1,4, டை ஆக்ஸேன்

94. பீனாலை , டையசோனியம் குளோரைடு & NaOH முன்னிலையில் வினைப்படுத்தும் போது என்ன நிகழும்? (OR) இணைப்பு வினையை எழுதுக. (OR) பீனாலுக்கான சாய சோதனையை எழுதுக.

பென்சீன் டையசோனியம் குளோரைடு காரத்தின் முன்னிலையில் பீனால் உடன் வினைபுரிந்து P- ஹைட்ராக்சி அசோபென்சீன் கிடைக்கிறது.



பென்சீன் டையசோனியம் குளோரைடு பீனால் P - ஹைட்ராக்சி அசோ பென்சீன் (ஒரு சிவப்பு ஆரஞ்சு சாயம்)

இது பீனாலைக் கண்டறிய உதவும் சாய சோதனையாகும்.

95. கிளிசரால் நீர் நீக்க வினையை எழுதுக (or) அக்ரோலின் தயாரித்தல் வினையை எழுதுக

கிளிசரால் $KHSO_4$ முன்னிலையில் நீர் மூலக்கூறுகளை இழந்து அக்ரோலின் கிடைக்கிறது.



நிலையற்றது

96. பென்சைல் ஆல்கஹாலின் ஏதேனும் மூன்று பயன்களை எழுதுக.

- குறிப்பிட்ட பகுதியை மரத்துப்போகச் செய்யும் நரம்பில் போடும் ஊசி மருந்தாகவும்
- புரையோடுவதைத் தடுக்கும் களிம்பிலும்
- ஆஸ்துமா, கக்குவான் போன்றவற்றைக் குணப்படுத்தவும்
- செயற்கை பிசின்கள் பெருமளவில் தயாரிக்க பயன்படுகிறது.

97. பீனாலை கண்டறியும் ஆய்வுகளை கூறுக.

- பீனால் நடுநிலை பெரிக்குளோரைடு உடன் ஊதா நிறத்தை கொடுக்கும்
- பீனால் புரோமின் நீர் உடன் வெண்மை நிற வீழ்படிவு கிடைக்கும்
- பீனால் டயசோனியம் உப்புடன் ஆரஞ்சு சிவப்பு சாயம் கிடைக்கிறது.

98. கோல்பின் வினையை எழுதுக

சோடியம் பீனாக்சைடை கார்பன்—டை—ஆக்சைடு உடன் சேர்த்து வெப்பப்படுத்தும் போது சோடியம் சாலிசிலேட் உண்டாகிறது. இதை நீர்த்த ஹைட்ரோகுளோரிக் அமிலம் கொண்டு சிதைக்கும் போது **சாலிசிலிக் அமிலம்** உண்டாகிறது.



சோடியம் பீனாக்சைடு சாலிசிலிக் அமிலம்

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

99. டவ் முறை பற்றி குறிப்பு வரைக.

குளோரோ பென்சீனை காரத்துடன் வெப்பப்படுத்தும் போது பீனால் தயாரிக்கப்படுகின்றன. இது டவ் வினை என அழைக்கப்படுகிறது.

$$C_6H_5Cl + NaOH \xrightarrow{\Delta} C_6H_5OH + NaCl$$

குளோரோ பென்சீன் பீனால்

100. சோப்பாக்குதல் வினையை எழுதுக.

காரத்தைக் கொண்டு எஸ்டரை நீரார் பகுக்கும் போது சோப்பு உண்டாகிறது. இதற்கு சோப்பாக்குதல் வினை எனப்படும்.



101. அயோடோபார்ம் வினையை எழுதுக.

அசிட்டால்டிகைடு I_2 / KOH உடன் வினைபுரிந்து அயோடோபார்மைத் தருகிறது.

$$CH_3CHO \xrightarrow{3I_2} CI_3CHO \xrightarrow{KOH} CHI_3 + HCOOK$$

102. ரீமர் – டிமன் வினை – சிறு குறிப்பு வரைக?

பீனாலை $CHCl_3$ மற்றும் NaOH உடன் சேர்த்து வெப்பப்படுத்தும் போது ஆர்த்தோ மற்றும் பாரா — பென்சால்டிகைடு கிடைக்கிறது.



103. ஆல்கஹால்களை கிரிக்னார்டு கரணிக்கு கரைப்பானாக பயன்படுத்த இயலாது ஏன்?

அதிக காரத்தன்மை உள்ள பொருள்களான கரிம உலோகச் சேர்மம் ***(RMgX)*** ஆல்கஹாலால் சிதைவடைகின்றன. எனவே ஆல்கஹால்களை கிரிக்னார்டு கரணிக்கு கரைப்பானாக பயன்படுத்த இயலாது.

$$R - OH + CH_3MgBr \longrightarrow CH_4 + RO - Mg - Br$$

104. டெரிலின் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது? (or) கிளைக்கால் கார்பாக்சலிக் அமிலங்களுடன் புரியும் வினையை எழுதுக.

டெரிதாலிக் அமிலத்துடன் கிளைக்கால் வினைபுரிந்து டெரிலின் கிடைக்கிறது



டெரிலின்

105. பீனால் ஜிங்க் உடன் நடத்தும் வினையை எழுதுக.

➤ பீனாலை ஜிங்க் துளுடன் உடன் வினைப்படுத்தும் போது பென்சீன் கிடைக்கிறது.

$$C_6H_5OH + Zn \longrightarrow C_6H_6 + ZnO$$

பீனால் பென்சீன்

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

106. பீனால் அமோனியாவுடன் எவ்வாறு வினைபுரிகிறது?

பீனாலை அமோனியாவுடன் சேர்த்து நீரற்ற ஜிங்க் குளோரைடு முன்னிலையில் வெப்பப்படுத்தும் போது, அனிலீன் கிடைக்கிறது.

$$C_6H_5OH + NH_3 \xrightarrow[\Delta]{ZnCl_2} C_6H_5NH_2 + H_2O$$

பீனால் அனிலின்

107. யூட்ரோபின் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது? அதன் பயன்பாடு யாது?

ஃபார்மால்டிஹைடு அமோனியாவுடன் வினைபுரிந்து யூட்ரோபின் கொடுக்கிறது.

$$6\,CH_2O + 4\,NH_3 \longrightarrow (CH_2)_6N_4 + 6H_2O$$

பயன் : மருத்துவ துறையில் சிறுநீரக புரைத் தடுப்பானாக பயன்படுகிறது

யூட்ரோபின்



108. ஃப்ரீடல் கிராப்ட் வினையை எழுதுக?

பென்சீன் நீரற்ற அலுமினியம் குளோரைடு முன்னிலையில் அசிட்டைல் குளோரைடு உடன் வினைபட்டு அசிட்டோ பீனோன் கிடைக்கிறது.



பென்சீன் அசிட்டோ பீனோன்

109. நவநகல் வினையை எழுதுக.

பென்சால்டிஹைடு பிரிடின் முன்னிலையில் மலோனிக் அமிலத்துடன் வினைபுரிந்து சின்னமிக் அமிலத்தை கொடுக்கிறது.

$$C_6H_5CHO + H_2C(COOH)_2 \xrightarrow{\text{பிரிடின்}} C_6H_5CH{=}C(COOH)_2 \xrightarrow[\Delta]{CO_2} C_6H_5CH{=}CHCOOH$$

மலோனிக் அமிலம் சின்னமிக் அமிலம்

110. கிளமன்சன் ஒடுக்க வினையை எழுதுக.

அசிட்டோன் ஜிங்க் இரசக்கலவை, அடர் HCl உடன் ஒடுக்கமடைந்து ஹைட்ரோ கார்பன்களாக கிடைக்கின்றன.



அசிட்டோன் புரப்பேன்

111. பார்மிக் அமிலம் மற்ற அமிலங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? (or) பார்மிக் அமிலத்தின் ஒடுக்கும் பண்பினை விளக்குக

- ஆல்டிகைடு மற்றும் அமிலம் என இரண்டு தொகுதியையும் பெற்றுள்ளது.
- ஃபெலிங்க் கரைசலையும், டாலன்ஸ் கரணியும் ஒடுக்குகிறது.
- $KMnO_4$ கரைசலின் இளஞ்சிவப்பு நிறத்தை நிறமிழக்கச் செய்கிறது.

112. பார்மலின் என்பது என்ன? அதன் பயன்களை எழுதுக

பார்மால்டிகைடின் 40% நீர்க்கரைசல் பார்மலின் எனப்படும்.

பயன்: உயிரியல் மாதிரிகளை பாதுகாக்கவும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது.

www.Padasalai.Net

113. HVZ - வினையை எழுதுக.

ஹேலஜன் (ம) பாஸ்பரஸ் ட்ரை ஹேலைடுடன் நடக்கும் வினையே HVZ —வினை எனப்படும்.

$$RCH_2COOH \xrightarrow{Br_2/PBr_3} RCH_2COBr \longrightarrow RCHBrCOBr \xrightarrow{H_2O} RCHBrCOOH$$

114. எஸ்டராக்குதல், மற்றும் மாற்று எஸ்டராக்குதல் வினையை சமன்பாட்டுடன் எழுதுக.

எஸ்டராக்குதல் வினை: அசிடிக் அமிலம் கனிம அமிலத்தின் முன்னிலையில் ஆல்கஹாலுடன் வினைப்பட்டு எஸ்டர்களை உருவாக்குகின்றன.

$$CH_3COOH + CH_3OH \xrightarrow{H^+} CH_3COOCH_3 + H_2O$$

அசிடிக் அமிலம் ஆல்கஹால் எஸ்டர்

மாற்று எஸ்டராக்குதல் வினை: எஸ்டரை கனிம அமிலத்தின் முன்னிலையில் ஆல்கஹாலுடன் வினைப்பட்டு மாற்று எஸ்டர்களையும் உருவாக்குகின்றன.

$$CH_3COOCH_3 + C_2H_5OH \xrightarrow{H^+} CH_3COOC_2H_5 + H_2O$$

எஸ்டர் ஆல்கஹால் மாற்று எஸ்டர்

115. ஆல்டிகைடைக் கண்டறியும் சோதனைகளை எழுதுக (அ) CH_3CHO –ன் ஒடுக்கும் பண்புகளை எழுதுக.

- ஆல்டிகைடுகள் எளிதில் ஆக்ஸிஜனேற்றம் அடைவதால் அவை ஒடுக்கிகள் எனப்படும்.
- இவை டாலன்ஸ் காரணியை உலோக சில்வராக ஒடுக்குகிறது.
- ஃபெலிங் கரைசலை சிவப்பு நிற குப்ரஸ் ஆக்சைடாகவும் ஒடுக்குகிறது.

$$CH_3CHO + 2Ag^+ + 3OH^- \longrightarrow CH_3COO^- + 2Ag\downarrow + 2H_2O$$

சில்வர் ஆடி

116. ஆஸ்பிரின் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது.

சாலிசிலிக் அமிலம் அசிடிக் நீரிலியுடன் சேர்த்து வெப்பப்படுத்தும் போது ஆஸ்பிரின் கிடைக்கிறது.



சாலிசிலிக் அமிலம் ஆஸ்பிரின்

பயன்: ஜுரம் நீக்கியாகவும், வலி நீக்கியாகவும் பயன்படுகிறது.

117. கார்பாக்சிலிக் அமிலத்தை கண்டறியும் சோதனைகள் மூன்று எழுதுக?

- நீலநிற லிட்மஸ் தாள் ⟶ சிவப்பு நிறமாக மாறுதல்
- கார்பாக்சிலிக் அமிலம் + $NaHCO_3$ ⟶ நுரைத்து பொங்கி $-CO_2$ வெளியேறுகிறது
- கார்பாக்சிலிக் அமிலம் + ஆல்கஹால் ⟶ எஸ்டர் உருவாகிறது

118. ஆக்ஸாலிக் அமிலத்தின் பயன்கள் மூன்றை எழுதுக.

- இரும்பு மற்றும் இங்க் கறைகளை நீக்க பயன்படுகிறது
- சாயத் தொழில், காலிகோ அச்சிடுதலில் நிறமூன்றியாகவும்
- ஆக்ஸிஜனேற்ற ஒடுக்க தரம் பார்த்தலிலும் பயன்படுகிறது

119. கடுகு எண்ணெய் வினையை எழுதுக.

அமீன் CS_2 உடன் வினைபட்டு சயனைடு உருவாகிறது.

$$CH_3NH_2 + CS_2 \xrightarrow{Hg_2Cl_2} CH_3NCS + H_2S$$

மெத்தில் ஐசோதயோசயனேட்

வானவில் டியூசன் சென்டர், அவளூர்.

120. கேப்ரியல் ஃதாலிமைடு தொகுத்தல் பற்றி எழுதுக.

தாலிமைடு KOH உடன் வினைபுரிந்து பொட்டாசியம் ஃதாலிமைடைத் தருகிறது. இதை ஆல்கைல் ஹாலைடுடன் வினைப்படுத்த N – ஆல்கைல் ஃதாலிமைடு கிடைக்கிறது. அதனை KOH உடன் வினைப்படுத்த பொட்டாசியம் ஃதாலேட்டையும், ஓரிணைய அமினையும் தருகிறது.



121. டயசோ ஆக்கம் என்றால் என்ன?

குளிர்நிலையில் உள்ள சோடியம் நைட்ரைட், HCl ல் கரைக்கப்பட்டுள்ள அனிலீனுடன் வினைபுரிந்து தெளிவான கரைசல் பெறப்படுகிறது. இந்த திரவம் பென்சீன் டையசோனியம் குளோரைடு ஆகும். இந்த வினை டயசோ ஆக்கம் ஆகும்.

$$C_6H_5\,NH_2 + HNO_2 \xrightarrow{HCl} C_6H_5N_2Cl + 2H_2O$$

பென்சீன் டையசோனியம் குளோரைடு

122. லாக்டிக் அமிலம் ⟶ பைருவிக் அமிலம். (அ) பைருவிக் அமிலம் தயாரித்தல் வினையை எழுதுக.

லாக்டிக் அமிலம் $H_2O_2/\ Fe^{2+}$ உடன் வினைபுரிந்து பைருவிக் அமிலம் உருவாகிறது.

$$CH_3CH(OH)COOH \xrightarrow{H_2O_2/Fe^{2+}} CH_3COCOOH$$

பைருவிக் அமிலம்

123. லாக்டிக் அமிலம் ⟶ லாக்டைடு (அ) வளைய எஸ்டர் தயாரித்தல் வினையை எழுதுக.

லாக்டிக் அமிலம் அமிலத்தின் முன்னிலையில் நீர் மூலக்கூறுகளை இழந்து லாக்டைடு உருவாகிறது.



லாக்டிக் அமிலம் லாக்டைடு

124. மயக்கமூட்டிகள் யாவை? ஓர் உதாரணம் தருக.

உணர்வை இழக்கச் செய்யும் மருந்துகள் மயக்க மூட்டிகள் எனப்படும்

மயக்கமூட்டிகள் **(எ.கா) ஈதர், குளோரோபார்ம்**

பொது மயக்கமூட்டிகள்	குறிப்பிட்ட இடத்தை உணர்விழக்கச் செய்யும் காரணிகள்
இவை எல்லா வகையான உணர்வையும் இழக்கச் செய்பவை. குறிப்பாக வலி உணர்வை மீள் தன்மையுடன் இழக்கச் செய்கிறது.	இவை பொது உணர்வை பாதிக்காமல் வலியுள்ள இடத்தில் மட்டும் வலி உணர்வை நீக்குகின்றன.

www.Padasalai.Net

125. புரைத்தடுப்பான் என்றால் என்ன? (or) ஆன்டிசெப்டிக் பற்றி சுருக்கமாக எழுதுக. (or) அயடோபார்ம், பீனால் கரைசல்கள் ஏன் புரைத்தடுப்பான்கள் என அழைக்கப்படுகின்றன?

நுண்ணுயிர்களை அழிப்பதற்கோ அல்லது அவற்றை கட்டுப்படுத்துவதற்கோ பயன்படும் வேதிப்பொருள்கள் புரை தடுப்பான் என அழைக்கப்படுகின்றன.

- அயடோபார்ம் புரைத்தடுப்பானாகவும், இதன் 1% கரைசல் கிருமி நாசினியாகவும்
- 0.2% பீனால் கரைசல் புரைத்தடுப்பானாகவும், இதன் 1% கரைசல் கிருமி நாசினியாகவும் பயன்படுகிறது

126. நிறம் உறிஞ்சிகள் யாவை? சான்றுகள் தருக.

கரிமச் சேர்மங்களின் நிறத்திற்கு காரணமாய் விளங்கும் அவற்றின் நிறைவுறா தொகுதிகள் (2 மற்றும் 3 பிணைப்பு உள்ள சேர்மம்) நிறம் உறிஞ்சிகள் எனப்படும்.

நைட்ரோ தொகுதி 

127. செயற்கை இனிப்பு சுவையூட்டிகள் யாவை? சான்றுகள் தருக.

ஆய்வகத்தில் தொகுக்கப்படும் சில கரிமச் சேர்மங்கள் கரும்புச் சர்க்கரையை விட பன்மடங்கு இனிப்புச்சுவை உடையதாக இருக்கும். அவை செயற்கை இனிப்பு சுவையூட்டிகள் என அழைக்கப்படுகின்றன.

- எ.கா சாக்ரின், டல்சின்

128. நுண்ணுயிர் எதிரிகள் என்றால் என்ன?

நுண்ணுயிரிகளில் காணப்படும் சில வேதிப் பொருள்கள் மற்ற நுண்ணுயிர்களின் வளர்ச்சியையும், வளர்சிதை மாற்றத்தையும், தடுக்கும் தன்மை பெற்றவை. இத்தகைய வேதிப் பொருள்கள் நுண்ணுயிர் எதிரிகள் எனப்படும். (எ.கா) பெனிசிலின்

129. சாயங்களின் சிறப்பம்சங்கள் யாவை?

- தகுந்த நிறங்களை பெற்றிருக்க வேண்டும்
- நீர், நீர்த்த அமிலம் & காரம் ஆகியவற்றில் பாதிக்கப்படாத தன்மையை பெற்றிருக்க வேண்டும்.
- சாயங்கள் துணிகளின் மேல் நிரந்தரமாக பிணைக்கப்படும் தன்மையுடையதாக இருக்க வேண்டும்

130. அமில நீக்கிகள் என்றால் என்ன? எ.கா தருக.

எண்ணெயால் சமைத்த (அ) பொரித்த உணவுகளை அதிக அளவில் உண்ட பின்பு வயிறு பகுதியில் எரிச்சல் ஏற்படுவதை உணர்கிறோம். வயிற்றினுல் போதுமான அளவுக்கு மேல் அமிலம் சுரப்பதே இதற்கு காரணமாகும்.

வயிறு எரிச்சல்களில் இருந்து விடுதலை அளிக்கின்ற பொருள்களுக்கு அமில நீக்கிகள் என்று பெயர்

(எ.கா) $Mg(OH)_2$ கூழ்மம்.

தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற
வானவில் டியூசன் சென்டரின்
வாழ்த்துகள்

www.Padasalai.Net

வானவில் டியூசன் சென்டர், அவளூர்.

வானவில் டியூசன் சென்டர், அவளூர்.

12ம்– வகுப்பு வேதியியல்

1. அணு அமைப்பு – II (2x1=2)

1. பிணைப்பு நீளம் என்பது பிணைப்புதரத்திற்கு-----------இருக்கும்
   அ) நேர்விகிதத்தில் ஆ) **எதிர்விகித்தில்** இ) சமமாய் ஈ) தொடர்பற்று

2. ஒரு துகளின் டி பிராக்ளே 1 Å எனில் அதன் உந்தம் (h = 6.626×10^{-34} kgm).
   அ) 6.6×10^{-23} kgm^2s^{-1} ஆ) ***6.6×10^{-24} $kgms^{-1}$*** இ) 6.6×10^{-34} $kgms^{-1}$ ஈ) 6.6×10^{34} $kgms^{-1}$

3. டி –பிராக்ளே சமன்பாடு. அ) ***$\lambda = h/mv$*** ஆ) $\lambda = hmv$ இ) $\lambda = mv/h$ ஈ) $\lambda = v/mh$

4. நைட்ரஜன் மூலக்கூறின் பிணைப்பு தரம் அ) 1 ஆ) 2 **இ) 3** ஈ) 4

5. மூலக்கூறு ஆர்ப்பிட்டால்களின் ஆற்றல் மட்டங்கள் .... சோதனைகளின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன.
   அ) **நிறநிரல்** ஆ)**x** - கதிர் விளிம்பு வளைவு இ) படிக இயல் ஆய்வு ஈ) இவற்றுள் எதுவுமில்லை

6. எலக்ட்ரானின் சுற்றுவட்ட பாதையானது......ன் பெருக்குதொகையாக இருக்க வேண்டும்
   அ) அதிர்வெண் ஆ) உந்தம் இ) நிறை ஈ) **அலைநீளம்**

7. **IF_7** மூலக்கூறில் உள்ள இனக்கலப்பு அ) sp^3d^2 ஆ) sp^3d^4 **இ) *sp^3d^3*** ஈ) sp^2d^4

8. கீழ்க்கண்ட எந்த துகள் ஒரே இயக்க ஆற்றலையும், அதிகபட்ச டி-பிராக்ளே அலைநீளத்தையும் பெற்றுள்ளது?
   அ) புரோட்டான் ஆ) நியூட்ரான் இ) α - துகள் ஈ) ***β* - துகள்**

9. எலக்ட்ரானின் ஈரியல்புத் தன்மையை விளக்கியவர் அ) போர் ஆ) ஹெய்சன்பர்க் இ) **டி பிராக்ளே** ஈ) பாலி

10. மூலக்கூறுகளுக்கிடைப்பட்ட ஹைட்ரஜன் பிணைப்பிற்கான சான்று
    அ) HF ஆ) H_2O இ) எத்தனால் ஈ) **அனைத்தும்**

11. **XeF_6** மூலக்கூறில் உள்ள இனக்கலப்பு.............. **அ) *SP^3d^3*** ஆ) SP^3d^2 இ) SP^3d ஈ) SP^3

12. மூலக்கூறினுள் நிகழும் ஹைட்ரஜன் பிணைப்பிற்கான சான்று
    அ) m - நைட்ரோபீனால் ஆ) ***o* - நைட்ரோபீனால்** இ) p - நைட்ரோபீனால் ஈ) இவற்றுள் ஏதுமில்லை

13. **SF_6** மூலக்கூறின் இனக்கலப்பு .... அ) SP^3 **ஆ) *SP^3d^2*** இ) SP^3d ஈ) SP^3d^3

14. ஒரு மூலக்கூறின் பிணைப்பு மூலக்கூறு ஆர்பிட்டாலில் 8 எலக்ட்ரான்களும் மற்றும் எதிர்பிணைப்பு மூலக்கூறு ஆர்பிட்டாலில் 4 எலக்ட்ரான்களும் உள்ளன. அதன் பிணைப்பு தரம் ....
    அ) 3 ஆ) 4 இ) 25 **ஈ) 2**

15. $E_n = -313.6/n^2$, $E_i = -34.84$ எனில் n - ன் மதிப்பு அ) 4 **ஆ) 3** இ) 2 ஈ) 1

16. நீர், நீர்ம நிலையில் காணப்படக் காரணம் ....
    அ) அதிக கொதிநிலை ஆ) குறைந்த கொதிநிலை இ) பூஜ்ஜிய உருகுநிலை ஈ)**ஹைட்ரஜன் பிணைப்பு**

17. மூலக்கூறுகளுக்கிடைப்பட்ட **H**-பிணைப்பிற்கான சான்று ....
    அ) o - நைட்ரோபீனால் ஆ) சாலிசிலிக் அமிலம்
    இ) o - ஹைட்ராக்சி பென்சால்டிஹைடு ஈ) **ஹைட்ரஜன் புளூரைடு**

18. மூலக்கூறு ஆர்பிட்டால்கள் .... கொள்கையின் படி எலக்ட்ரான்கள் நிரப்பப்படுகிறது.
    அ) பாலியின் தவிர்ப்பு தத்துவம் ஆ) ஹீண்ட் விதி இ) ஆ.்.பா தத்துவம் ஈ) **மேற்கூறிய அனைத்தும்**

19. **SO_4^{2-}** அயனியில் உள்ள இனக்கலப்பு .... ***அ) SP^3*** ஆ) SP^3d^2 இ) SP^3d ஈ) SP^3d^3

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html

20. 2s - ஆர்பிட்டாலில் உள்ள கோள நோடுகளின் எண்ணிக்கை........ **அ) *1*** ஆ) 2 இ) 3 ஈ) 4

21. CO_3^{2-} அயனியில் உள்ள இனக்கலப்பு

 அ) *SP^2* ஆ) SP^3 இ) SP ஈ) SP^3d

22. கீழ்கண்டவற்றுள் எச்சோதனை மூலம் எலக்ட்ரான் அலைத்தன்மை பெற்றுள்ளது உறுதியாகிறது?

 அ) ***G.P* தாம்சனின் தங்கத் தகட்டுச் சோதனை** ஆ) கரும் பொருள் கதிர்வீச்சு

 இ) முல்லிகன் எண்ணெய்த்துளி ஆய்வு ஈ) ஒளிமின் விளைவு

23. **ICl_4^-** அயனியில் உள்ள இனக்கலப்பு .... அ) SP^3 **ஆ) *sp^3d^2*** இ) SP^3d ஈ) SP^3d^3

24. ஆக்ஸிஜன் மூலக்கூறின் பிணைப்புத்தரம் அ) 2.5 ஆ) 1 இ) 3 ஈ) ***2***

25. இரண்டாவது போர் சுற்று வட்டப்பாதையில் ஹைட்ரஜன் அணுவில் உள்ள எலக்ட்ரான் ஆற்றல் **-E** எனில் முதல் போர் சுற்று வட்டப்பாதையில் எலக்ட்ரானின்ஆற்றல் என்ன?

 அ) 2E **ஆ) *- 4E*** இ) -2E ஈ) 4E

26. ஹைட்ரஜன் அணுவிற்கான போர் ஆரத்தின் மதிப்பு

 அ) ***0.529×10^{-8} cm*** ஆ) 0.529×10^{-10} cm இ) 0.529×10^{-6} cm ஈ) 0.529×10^{-12} cm

27. ஓர் அணுவில் உள்ள எலக்ட்ரானின் ஆற்றல் **En =**

 அ) $-\frac{4\pi^2me^4}{n^2h^2}$ ஆ) $-\frac{2\pi^2me^2}{n^2h^2}$ **இ) $-\frac{2\pi^2me^4}{n^2h^2}$** ஈ) $-\frac{2\pi me^4}{n^2h^2}$

28. **PCl_5** உள்ள இனக்கலப்பு ....

 அ) SP^3 ஆ) SP^3d^2 **இ) *SP^3d*** ஈ) SP^3d^3

29. குறைந்த ஆற்றல் கொண்ட மூலக்கூறு ஆர்பிட்டால் எது?

 அ) *σ1s* ஆ) σ1s* இ) π2py ஈ) π*2py

30. **NH_4^+** அயனியில் உள்ள இனக்கலப்பு

 அ) SP ஆ) SP^2 **இ) *SP^3*** ஈ) *SP^3d*

2. ஆவர்த்தன அட்டவணை – II (1x1=1)

1. பின்வருவனவற்றில் எது அதிக எலக்ட்ரான் கவர் தன்மை கொண்டது? (Most Electro Negativity Element)

 அ) ஃப்ளுரின் ஆ) குளோரின் இ) புரோமின் ஈ) அயோடின்

2. ஓர் அணுவின் ஆரம் சகப்பிணைப்பு--------------லிருந்து கணக்கிடப்படுகிறது

 அ) கோணம் ஆ) தரம் **இ) நீளம்** ஈ) அனைத்தும்

3. நிறைவுற்ற ஹைட்ரோ கார்பன்களில் சோதனை மூலம் கண்டறியப்பட்ட **C-C** மதிப்பு

 அ) 1.34Å ஆ) 1.36Å **இ) 1.54 Å** ஈ) 1.56 Å

4. சரியான கூற்றை தேர்ந்தெடு

 அ) **போரானை விட கார்பனின் அணுக்கரு மின்சுமை அதிகம்** ஆ) போரானை விட கார்பனின் உருவளவு பெரிது

 இ) கார்பன் எலக்ட்ரான் குறை சேர்மங்களை உருவாக்குவது ஈ) C அயனிச் சேர்மங்களை உண்டாக்கும்

5. ஃப்ளுரினின் அயனியாக்கும் ஆற்றலை கார்பனுடன் ஒப்பிட்டால் ஃப்ளுரின்

 அ) **அதிக அயனியாக்கும் ஆற்றல் கொண்டுள்ளது** ஆ) குறைந்த அயனியாக்கும் ஆற்றல் கொண்டுள்ளது

